12.03.2026

MC.11/2024

RW–1 பொன்னுச்சாமி

**(எதிர்மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

முதல் மனுதாரர் என்னுடைய மனைவி. 2 மற்றும் 3ம் மனுதாரர் மைனர் குழந்தைகள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் அது தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்களுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தின் போது 1ம் மனுதாரர் வரதட்சணையாக எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க 7 பவுன் தங்க நகைகள் மற்றும் 1 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார் என்றால் சரியல்ல. பழைய பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்தின் போது கொத்தனார் வேலை செய்தேன் என்றால் கெல்பராக வேலை செய்கிறேன். திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாள் மனுதாரர் என்னுடன் வாழ்ந்தார் என்றால் திருமணம் முடிந்து 4 மாதம் மட்டும் வாழ்ந்தார். அதன் பிறகு வாழவில்லை. நான் 2020ம் வருடம் மனுதாரர் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கு நடைபெறும் போது இருவரையும் சேர்ந்து வாழ்வது சம்பந்தமாக சமாதானம் பேசினார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு செப்டம்பர் 2022 முதல் நவம்பர் 10, 2022 வரை மட்டும் மனுதாரர் என்னுடன் வசித்தார் என்றால் சரிதான். இதற்கிடையில் தான் விவாகரத்து வழக்கானது ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகியது என்றால் சரிதான். மனுதாரர் தற்போதும் எவ்வித நிபந்தனையின்றி சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் தயாராக இருக்கிறேன்.

குறுக்கு விசாரணை வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்தி வைக்கப்படுகிறது.